பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமான ✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூ2/50

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஞு சித்திரை மீ 17 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 23 (30 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-122

# பயிலுநர் ஆசிரியர் நியமனம்:
# உடனடி அமுலுக்கு ஏற்பாடு

## மாவட்ட ரீதியிலான தேவை விவரம்
### இன்று மாலைக்குள் அமைச்சிடம்

கொழும்பு, ஏப்ரல் 30

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களை நியமிக்கும் திட்டம் உடனடியாக அமுல் செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச உத்தரவிட்டிருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சு துரித ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கி உள்ளது.

அதன் ஒரு கட்டமாக, மாவட்டக் கல்வி அலுவலகங்கள், தமது மாவட்டங்களில் உள்ள இப்போதைய ஆசிரியர் எண்ணிக்கை. பாடவாரியாகத் தேவைப்படும் ஆசிரியர் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கொண்ட திரட்டை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலைக்குள் கல்வி அமைச்சில் ஒப்படைக்க வேண்டும் என அவசரமாகக் கேட்கப்பட்டுள்ளன.

மாவட்டம் தோறும் பாடசாலைகள் ரீதியாக பாடவாரியாக தற்போது கடமையாற்றி வரும் ஆசிரியர்கள், தேவைப்படும் ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை போன்ற புள்ளிவிபரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த கல்வி அலுவலகங்கள் தமது விபரத் திரட்டுக்களை இன்று ஞாயிறு மாலைக்குள் அமைச்சில் நேரடியாக ஒப்படைக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள சகல மாவட்டங்களினதும் ஆசிரியர்கள் பற்றிய விபரங்கள் தொகுக்கப்பட்டு மே மாதம் இரண்டாம் திகதியளவில் மேல் நடவடிக்கைக்காக ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தகவல் தந்தன. (அ-164)

### முச்சந்தி முரளி



ஒரு நாளிலை 25 லட்சம் ரூபா குடுத்திருக்கினமாமோ......? உதுகளைக் கேட்கயிக்கை குடாநாட்டுச் சனம் பாவங்கள் எண்டுதான் யோசிக்க வேண்டி இருக்குது...!

### சுபநேரம்

30—04—1989
சித்திரை — 17
ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்;
08 58 முதல் 10.28 வரை
ராகுகாலம்:
04 28 முதல் 05 58 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
நவமி முற்பகல் 7.42 வரை
திருநாவுக்கரசர் குரு பூஜைத் தினம்.

## இராணுவ ஊழியர் கடத்தல்

மாங்குளம், ஏப். 30

மாங்குளம் இலங்கை இராணுவ முகாமில் பணிபுரிந்த சிவிலியனான சோமரத்தின என்பவர் இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

இம்மாதம் 18ஆம் திகதி லொறி ஒன்றில் தமது ஊருக்கு லீவில் சென்றபோது மாங்குளம் – வவுனியாவுக்கும் இடையில் இவர் கடத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டது. (ஒ-94)

## ஒரே நாளில் ரூ. 25லட்சம் கிளிநொச்சியில் நிவாரணம்!

வட்டக்கச்சி, ஏப். 30

கிளிநொச்சிப் பகுதியில் வன்செயலால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமாக நேற்று மட்டும் 25 லட்சம் ரூபா வழங்கப்பட்டது. சுமார் 500 குடும்பங்களைச் சேர்ந்தோர் இந்நிவாரணப் பணத்தைப் பெற்றனர்.

கிளிநொச்சி பொலீஸ் நிலையத்திலுள்ள இலங்கை வங்கி அலுவலகத்தில் வைத்து நிவாரணம் வழங்கப்பட்டது.

கடந்த வாரத்தில் நிவாரணத்தை வழங்க அமைதிப் படையின் உதவி கேட்கப்பட்டதாகவும் அது கிடைக்காததால் நேற்று பொலீஸ் நிலைய அலுவலகத்தில் வைத்து இது வழங்கப்பட்டது எனவும் தெரிய வருகிறது. (ஒ 163)

## நெல்லியடிப் பகுதியில் கிரனேட்வீச்சு, துப்பாக்கிச்சூடு!

வல்வெட்டித்துறை, ஏப். 30

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நெல்லியடி-கொடிகாமம் வீதியில் உள்ள இராணுவத்தினரின் சென்றியை நோக்கி கிரனேட் வீசப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து படையினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

அயல் வீடுகளில் உள்ள பலர் தாக்குதல்களுக்கு உள்ளாகினர் எனச் சொல்லப்பட்டது.

எம். யோகராஜா என்பவர் தாக்குதலுக்குள்ளாகி மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் விளக்குமாறினால் தாக்கப்பட்டதாகப் புகார் கூறப்பட்டது.

இதேவேளை—

நேற்றுக் காலையும் நெல்லியடிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

நெல்லியடி அமைதிப்படை முகாமுக்கு அண்மையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து அமைதிப்படையினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் இப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. (ஒ-9-160-70)

## யாழ். பயணிகள் பஸ்மீது துப்பாக்கிப் பிரயோகம்!

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பயணிகள் பஸ் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த வியாழன் பிற்பகல் நிகழ்ந்த இச் சம்பவத்தில் இரு பயணிகள் காயமடைந்தனர்

பஸ் மதவாச்சிக்கும் றம்பாவைக்கும் இடையே சென்று கொண்டிருக்கையிலேயே அடையாளம் காணப்படாத நபர்கள் பஸ்ஸை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த பயணிகள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஒ-எ]

## வரட்சி நிவாரணமாக வவுனியாவில் அரிசி

வவுனியா, ஏப்ரல் 30

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து நிலவி வரும் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட 23 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

உலக பொதுநல நிறுவனங்களினால் வழங்கப்படும் இந்த நிவாரண உதவியின் மூலம் அரிசியே வழங்கப்படவுள்ளது என்றும்-

ஏப்ரல் மாதத்திற்குரிய விநியோகம் இம்மாவட்டத்தின் சில பகுதிகளில் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளதாகவும் அதிகாரிகள் உதயனுக்குத் தெரிவித்தனர். (ஒ-164)

## இந்திய வெளியுறவு செயலர் நாளை கொழும்பு வருகிறார்

கொழும்பு, ஏப். 30

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. எஸ். கே. சிங் நாளை திங்கள் கொழும்பு வருகிறார். ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு இந்தியப் பிரதமரின் முக்கிய செய்தி ஒன்றை கொண்டு திரு. சிங் வருவதால் அவரது வருகை இரு நாடுகளின் அரசியல் உறவில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இலங்கை அரச விடுதலைப் புலிகள் பேச்சு மற்றும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பானசிலவிளக்கங்களை இந்திய அரசு, இலங்கையிடம் இருந்து எதிர்பார்ப்பதாக ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

உத்தேச நட்புறவு ஒப்பந்தம் சம்பந்தமாகவும் திரு. சிங் இலங்கை அதிகாரிகளுடன் பேசுவார் என்று நம்பப்படுகிறது. (ஒ-எ)

## கரவெட்டியில் இளைஞர் கொலை

கரவெட்டி, ஏப்ரல் 30

நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) இரவு 7 மணியளவில் கரவெட்டி மேற்கு உச்சில் பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் அதே பகுதியைச் சேர்ந்த ம. மகாலிங்கம் (வயது 27) என்பவராவார்.

சடலத்துக்கு அருகில் உரிமை கோரும் காகித அட்டை ஒன்றும் கிடந்தது [ஒ-70]

## தமிழ்ப் பகுதி எம். பிக்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஏப்ரல் 30

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எம். பிக்களை அழைத்து ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச மாநாடு ஒன்றை நடத்தினார்.

மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்து அந்த மாநாட்டில் ஆராயப்பட்டது.

எம். பிக்கள் மாகாணசபை உறுப்பினர்களுடன் இணைந்து அந்தந்த மாவட்ட வளர்ச்சிக்கு உழைக்கவேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

மாவட்ட இணைப்புக் குழுக்களை மீண்டும் உருவாக்கப் போவதாகவும் ஜனாதிபதி சொன்னார்.

தமது பகுதிகள் அபிவிருத்திப் பணியில் புறக்கணிக்கப்பட்டதாக பல தமிழ், முஸ்லிம் எம். பிக்கள் சுட்டிக்காட்டினர். திட்டங்களை அமுல் செய்ய தமிழ் தெரிந்த நிர்வாகசேவை அதிகாரிகள் இல்லை என்றும் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அந்தக் குறைபாட்டை நீக்க ஜனாதிபதி மாநாட்டில் வைத்து உத்தரவிட்டார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் நேற்று தீவிரவாதிகள் தாக்குதல்
### படையினர் மூவர் உட்பட ஐவர் பலி

தென்பகுதியில் தீவிரவாதிகள் நேற்று நடத்திய தாக்குதல் சம்பவங்களில் இரு பொலீஸார் ஒரு சிப்பாய் உட்பட ஐவர் உயிரிழந்தனர்.

★ மாத்தறை மாவட்டத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர்மீது தீவிரவாதிகள் மறைந்து இருந்து தாக்கினர். அட்போது ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். 2 பேர் காயமடைந்தனர்.

★ புத்தளத்தில் இடம் பெற்ற தாக்குதலில் அரசு அதிகாரி ஒருவரும் ஒரு சிவிலியனும் கொல்லப்பட்டனர். அரசு அலுவலகம் ஒன்றும் தீ வைத்து எரிக்கப்பட்டது.

★ அநுராதபுரத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட பொலீஸார் மீ தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் இரு பொலீஸார் கொல்லப்பட்டனர். 6 பேர் காயமடைந்தனர். (ஒ-எ-9)

## யாழ். மாவட்டத்தில் மேலும் புதிய ஆசிரியர்கள் விரைவில் நியமனமாவர்

யாழ்ப்பாணம். ஏப்ரல் 30

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் கடமை புரிவதற்கு மேலும் ஒரு தொகுதி ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளைக் கல்வி அமைச்சு மேற்கொண்டிருப்பதாக அறிய வந்துள்ளது.

அதனால் புதிய ஆசிரியர் நியமனம் மிக விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய ஆசிரியர்களை விரைவாக நியமிப்பதற்கு வசதியாக, யாழ் மாவட்ட கல்வித் திணைக்களத்தில் இருந்து தேவையான விவரங்களைத் தொலைபேசி மூலம் கல்வி அமைச்சிற்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய ஆசிரியர் நியமனத்துடன் யாழ் மாவட்ட பாடசாலைகளில் தற்பொழுது நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை கணிசமான அளவு குறைக்கப்படும் என யாழ் மாவட்ட கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-11)

## அரசு-விடுதலைப் புலிகள் தூதுக் குழுக்கள்
# அடுத்த வாரத்தில் முழுக்கட்ட பேச்சுக்கள் ஆரம்பமாகும்

கொழும்பு, ஏப். 30

சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையேயான புதிய பேச்சுவார்த்தைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட அரசுத் தூதுக்குழு முன் விடுதலைப் புலிகள் இயக்கம் தங்களது கோரிக்கைகளை முன் வைக்கும்.

''நியாயபூர்வமான தீர்வு'' ஒன்றுக்கான அறிக்கை ஒன்றை விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வைக்க இருப்பதாக விடுதலைப்புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன என்று இங்கு செய்தி வெளியாகி உள்ளது.

கொழும்பில் டாக்டர் அன்ரன் பாலசிங்கத்தோடு மேலதிக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சேர்ந்து கொண்டதும் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும்.

திம்புப் பேச்சுக்களின் போது டாக்டர் பாலசிங்கத்தோடு கலந்து கொண்ட ஏ. திலகர் நேற்று முன்தினம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி 154 ஆம் கட்டையடியில் வெள்ளியன்று மோதல் சம்பவம்
## 2 இந்தியப்படை ஜவான் பலி; ஒருவர் காயம்

கிளிநொச்சி, ஏப். 30

கிளிநொச்சி 154 ஆம் கட்டை செல்வபுரம் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை பத்து மணியளவில் நேரடி மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

அச்சம்பவத்தில் இரண்டு அமைதிப்படை ஜவான்கள் மரணமானார்கள் [illegible] வர் படுகாயம் அடைந்தார் என்றும் அறிய வருகிறது.

வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் ரயிலுக்காக ரயில் பாதையில் இந்தியப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் [illegible].

இதனைத் தொடர்ந்து அந்தப் பிரதேசம் சுற்றிவளைக்கப்பட்டுப் பலத்த தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன.

இந்த அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து பொது மக்கள் தாக்குதலுக்கு உள்ளா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் தேடுதல்; மக்கள் இடம் பெயர்வு

கிளிநொச்சியில் வெள்ளியன்று இடம்பெற்ற அசம்பாவிதத்தை அடுத்து 154 ஆம் கட்டை, பாரதிபுரம், செல்வபுரம் பகுதிகளில் நேற்றும் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன

இப்பகுதிகளில் இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் அருகில் உள்ள கிராமங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள். இவர்களில் அனேகமானோர் இந்திய வம்சாவளியினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்றுக் காலை முறிப்பு, கோணாவில் காட்டுப் பிரதேசங்களை நோக்கி ஷெல்கள் ஏவிவிடப்பட்டன. (ஒ-ரி-163)

### கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர்

வெள்ளியன்று கிளிநொச்சி செல்வபுரம் பகுதியில் இடம் பெற்ற அசம்பாவித சம்பவத்தைத் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளாகி கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவோர் விவரம் வருமாறு:—

ஆர். முருகையா (26) ரவி (24) தங்கராசா (28), சண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Broiler பேட்டுக்கோழி சேவல், சூப் குஞ்சு விருத்துக் குஞ்சு வகைகள் எப்பொழுதும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஒழுங்கை முகப்பிலும் எங்கள் பண்ணை வாசலிலும் Nallur Video Centre என்னும் விளம்பரப் பலகை உண்டு. Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, மத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-2087)

கோண்டாவில் கிழக்கில் இருபாலை றோட்டு ஆலடி ஒழுங்கை சந்தியில் பழைய வீட்டுடன் எட்டரை பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. 6/5, Layards Road, Colombo 5 (240)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கடைத் தளபாடங்கள், Fan, T.V., Cycle Usha தையல் மெஷின், Cot, மற்றும் பல விற்பனைக்குண்டு. Sureka 343, பருத்தித்துறை றோட், அரசடி நல்லூர். [10677]

Honda Reconditioned புதிய பழைய Model C 90, C 70 C 50 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு No. 390, மெயின் வீதி, சுண்டுக்குளி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம். (10764)

ஜாம் (Jam) போத்தல் மூடிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: இல. 75, மாட்டீன் வீதி, றெயில்வே ஸ்ரேசன் அருகாமையில், யாழ்ப்பாணம். (10690)

நல்ல நிலையில் சொந்தப் பாவிப்பில் உள்ள 26 சிறி தொடரிலக்கமுடைய நோமல் லொறி உடனடி விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: 3 நிக்கிலஸ், கைத்தொழில் பேட்டை வீதி, அச்சுவேலி. (305

சுருக்குக்கேற் 8' உயரம் 9' அகலம் இருபாதி) இரும்பு, ஜன்னல், கிறில் (5 1/4' உயரம், 11' நீளம்'8' நீளம் 5 1/4' உயரம்)இரண்டு மற்றும் தகரம் நிலை வேம்பு, பாலை) கட்டில் பழைய மரங்கள் ஆகியன மலிவான விலையில் உண்டு. இடம்: சின்னவி கந்தசாமி, நவாலி வடக்கு, நாச்சிமார் கோவிலடி. [10774]

Technics, Stereo, Double, Cassette Deck, RS-T 20 மற்றும் Amplifier Su - 50 Stereo SH - 8020 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: M. பன்னீர்ச்செல்வம், அம்பலவாணர்வீதி, உடுவில், சுன்னாகம். [316]

C. G 125 Deluxe மொடல் கொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. த. தம்பிராசா, 'பவுர்ணமி' புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு. [315]

வீடியோ படப்பிடிப்புக்கு பாவிக்கும் ஒறிஜினல் Furi வீடியோக் கசற்றுக்கள் எம்மிடம் விற்பனையாகின்றன. மற்றும் சகல விதமான வீடியோ Heads உம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. எவர்விஷன் 21A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C/ 2411)

Re - condition Honda MD 50, MD 90 மற்றும் மொடல்கள் சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். சின்னத்துரை, வேம்படி, காரைநகர், (324)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படியில் யாழ் பல்கலைக்கழகத்துக்கும் யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் அண்மையில் ஒரு பரப்புக் காணியில் நாலு பக்கமும் மதிலும் தனிக்கிணறும் கொண்ட புதியவீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மு. கந்தையா, 10/4, அம்பகர் வீதி, பிரம்படி கொக்குவில். [325]

## தேவை

எமது தொழிற்சாலையின் உற்பத்திப் பொருளை வீட்டுக்கு வீடு விற்பனை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. கடைகளுக்கு விற்பனை செய்வதற்கு விற்பனையாளரும் தேவை. நேரில் வரவும். 29/3, நக்கா வீதி, யாழ்ப்பாணம். [10770]

தபாற் கந்தோர் வேலைகளில் நன்கு தேர்ச்சிபெற்ற வரும் ஆங்கிலத்திலும் தமிழிலும் தட்டச்சு சுருக்செழுத்துத் தெரிந்த பெண் ஒருவர் தேவை. மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. மே மாதம் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 00 மணியளவில் நேரில் வரவும்: இலானி முகவர் தபால் நிலையம், 19, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் [313]

யாழ்நகரில் கிறீப் றவுசுக்கு காசாளர், விற்பனையாளர் தேவை நகரின் அண்மையில் இருக்கும் பெண்கள் விரும்பத்தக்கது டில்கா, 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (280)

யாழ்நகரி இயங்கிவரும் சமூகசேவை நிறுவனம் ஒன்றிற்கு மேற்பார்வையாளராக பணியாற்ற சமூகப்பணியில் நாட்டம் கொண்ட ஓய்வுபெற்ற உத்தியோகஸ்தர் தேவை. உணவு இருப்பிட வசதிகளும் அளிக்கப்படும். நிறுவனத்திலே தங்கி பணிபுரிய வேண்டும். சம்பளம் பேசி முடிவெடுக்கலாம். தொடர்பு: 500, C/o உதயன், யாழ்ப்பாணம். [301]

யாழ். கன்னாதிட்டி காளியம்மன் தேவஸ்தானத்திற்கு செயலகப் பொறுப்பாளராகக் கடமையாற்ற ஒருவரும் ஆலய சிப்பந்தியாகக் கடமையாற்ற ஒருவரும் தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவராகவும், ஆசார சீலராகவும், ஆலயத் தொண்டு புரியும் நோக்குடையவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். காளியம்பாள் தேவஸ்தானம். 100, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 10699)

## மணமகன் தேவை

இந்து உயர்குல வேளாள 39 வயது உதயத்தில் செவ்வாய் உள்ள படித்த ஆங்கில அறிவுள்ள மணமகளுக்கு படித்த நற்குணமுள்ள மணமகன் தேவை. பணமும் நகையும்சீதனமாக கொடுக்கப்படும். தொடர்பு: 491C/o உதயன், யாழ்ப்பாணம். (234)

## மணமகன் தேவை

இந்து கோவிய இனத்தைச் சேர்ந்த கூட்டுஸ்தாபனத்தில் வேலைபார்க்கும் பெண் மணிக்கு Doctor, Engineer, Accountant அல்லது Bankல் வேலைபார்க்கும் 35க்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட மணமகன் தேவை. சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்க: 502 மே/பா, உதயன், யாழ்ப்பாணம். [318]

## மணமகன் தேவை

யாழ் இந்து வேளாள உயர் குல அரச சேவையில் எழுதுவினைஞரான 38 வயது திருமணமாதகா கன்னிப்பெண்ணுக்கு சுகுந்த வரன் தேவை. தாரமிழந்த பிள்ளை அற்றோரும் விண்ணப்பிக்கலாம் 494. C/o உதயன், யாழ்ப்பாணம். 287

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

## தவறிவிட்டது

இராஜேந்திரம் அன்னபூரணதேவி, பத்தர்கேணி, காரைநகர் அடையாள அட்டை இல. 667862060V தவறிவிட்டது. கண்டெடுத்தவர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [10767]

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் பிரதான வீதியிலிருந்து 50 யார் தூரத்தில் வீடு கட்டுவதற்கு ஏற்ற நிலம், பரப்பு ஐந்து விற்பனைக்கு உண்டு. தொடர்பு; 620, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், (ஓட்டுமடம் சந்திக்கு அண்மையில்) [10771]

## கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) (Lohmann) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள், [Cobb] புறொயிலர்குஞ்சுகள் [2.5 89] செவ்வாய்க் கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். கூடுதலாக எடுப்பவர்களுக்கு சலுகையுண்டு. முன்கூட்டியே பதிவுசெய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்] (10692)

## கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

[Dekalb] பிறவுண் சேவல் குஞ்சு 2ஆம் 3ஆம் திகதிகளில் வநியோகிக்கப்படும். 100 குஞ்சுகளுக்குமேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 4/- முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்) (10776)

## வெளிவந்துவிட்டது

நடைமுறை விடயம் வர்த்தகம் A/L இ. இரட்ணம். கிடைக்குமிடம் Becon யாழ்ப்பாணம். ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, சிவாகி கல்வி நிறுவனம். [10696]

## பிரத்தியேக வகுப்புக்கள்

9ஆம், 10ஆம் வகுப்பிற்கான வர்த்தகமும், கணக்கியலும் 01- 05-89 இல்இருந்துஆரம்பமாகின்றது. ஒரு வகுப்பில் 10 பேர் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். விஷேட பயிற்சிகளும் இடம் பெறும். இன்றே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள். ஆசிரியர், 200, அரசடி வீதி, கந்தர்மடச்சந்தி யாழ்ப்பாணம். [267]

## வகுப்பு

A/L 91 இரசாயனம் 108 Brown Road A/L 91 அடிப்படை இரசாயனம் முதல் வகுப்பு ஆரம்பம். ஆசிரியர் சதீஸ் பிரிவு I ஆரம்பம் 2-5-89 செவ்வாய் 6.30 a.m (செவ்வாய், வியாழன் 6.30 a.m) பிரிவுII ஆரம்பம் 30-4-89 ஞாயிறு 11a.m. [சனி ஞாயிறு 11 a.m.) (261)

## ஆங்கிலம்

ஆங்கிலம் ஆரம்பத்தில் இருந்து O/L 89, A/L வகுப்புகள் Spoken Business English, Personal Classes தினசரி காலை, மாலை. கனகசபை, 86ஆம் ஒழுங்கை, கந்தர் மடம் யாழ்ப்பாணம். (290)

## New City Traders

Daytron T. V. 12'', 14'' கறுப்பு வெள்ளை, Daytron T. V. 14'', 20'' கலர், Daytron வீடியோ player, Phillips கசெற் றெக்கோடர், Phillips Gas cooker மற்றும் வீட்டுக்கு தேவையான மின் உபகரண பொருள்களையும் பெற்றுக் கொள்ள New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/2291)

## றேனியோ

றேனியோ தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்துகொள்ள தயா அச்சகம், 138 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [மனோகரா சந்தி] [C/2359]

## தவறிவிட்டது

த. வாசுகி துன்னாலை தெற்கு கரவெட்டி அடையாள அட்டை இல: 698062665 ஆகிய எனது அடையாள அட்டை பருத்தித்துறை ''சவனு'' வில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ராஜன் சைக்கிள் வேக்ஸ் சவனு பருத்தித்துறையில் தயவு செய்து ஒப்படைக்கவும். [317]

## அறிவொளி


அறிவொளி கல்வி வெளியீட்டுக்கு உயர்தர கலை, வர்த்தக துறை மாணவர்களுக்கு ஏற்ற கட்டுரைகள் விரிவுரையாளரிடமும் பட்டதாரி ஆசிரியர்களிடமும் இருந்து எதிர்பார்க்கின்றோம். பிரசுரத்திற்கு ஏற்கப்படும் கட்டுரைகளுக்கு சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர்

அறிவொளி
த. பெ. இல. 162,
கொழும்பு.

[309]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### ஆறுமுகம் இராஜபட்சம்

(பொறியியலாளர்)

மண்ணுலகம்: 1919. 03. 16 — முருகன் அடியில் 1989. 03. 31

எமது குடும்பத்தின் ஒளியாய் குடும்பத்தலைவனாய் பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்த தெய்வமே! அமரராகி 31 ஆம் நாள் ஆயினும் உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்

'ராஜகிரி'
தொல்புரம்,
சுழிபுரம்.

(321)

## 31 ஆம நாள நினைவஞ்சலி



### ஐயம்பிள்ளை கனகரத்தினம்

[ஓய்வுபெற்ற எஸ்ரேற் சுப்பிறீன்ரன்ற்]

தோற்றம்:- 1 - 5 - 1901 — மறைவு:- 31 - 3 - 1989

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

வவுனியா.

[10768]

கீல்ஸ் (KEELS) ஸ்தாபனத்தின்
பதப்படுத்தப்பட்ட
இறைச்சிவகைகள்




போன்: 22575
ஏகவிநியோகஸ்தர்:
மெடிக்கல் ஹோல்
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## ★ கம்பியூட்டர் கல்வி ★

**d Base III +**

2 Months
on
TUESDAYS & FRIDAYS

A job oriented Computer Course

Commencement — 02 - 05 1989
at 8.30 a.m.

Lectures by Qualified & Experienced Panel
தமிழிலும் விளக்கங்கள் தரப்படும்

Fees: Only 600/- per Month

**C. I. M. A, I. D. P. M, I. A. B**
**Book Keeping, Shorthand / Typing, Basic வகுப்புகளும் நடைபெறுகின்றன.**

### SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd Cross Street,
(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
JAFFNA.

[C-2408]

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



★ ★ ★

உதயம்: 01- 04- 19.1

● ● ●

உதிர்வு: 10- 05- 1988

திதி: 30- 04- 1989

### திருமதி இராசமணி பாக்கியநாதன்

எமது குலவிளக்கே! எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்துவிட்டாலும் உமது நினைவுகள் எம்மை விட்டு நீங்காது

உரும்பில், மயில்ட்டி, அனலைதீவு, பூவரசங்குளம் ஆகிய இடங்களில் கடமையாற்றி மறைந்த மருத்துவமாது திருமதி இராசமணி பாக்கியநாதனின் ஆத்மசாந்திக்காக அவரது இல்லத்திலும், வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவிலிலும், சுன்னாகம் வரிசப்புலம் மகாமாரி அம்மன் கோவிலிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் பூசையில் பங்கு கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

தகவல்:
கணவர் ச. பாக்கியநாதன்

'இராச இல்லம்'
30, கரம்பைக்காடு,
வவுனியா.

[319]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BRIGHT TRAINING CENTRE

க. பொ. த உயர்தர வர்த்தக, கலை, மாணவர்கள் நன்மை கருதி பிரபல விரிவுரையாளர்களாலும், ஆசிரியர்களின் கூட்டு முயற்சியாகவும் வெளிவருகிறது.

**'அறிவொளி'**
**கல்வி வெளியீடு**

இதற்கென BRIGHT STUDY CIRCLE எனும் கல்வி வட்டம் ஒன்றும் மாணவரிடையே ஆரம்பிக்கப் படுகின்றது. கல்விவட்டத்தைப்பற்றி அறியவிரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க:

அறிவொளி.
பிறைட் பயிற்சி நிறுவனம்,
த. பெ. இல. 162.
கொழும்பு.

(308)

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு வேலை அனுபவமுள்ள மேசன், கூலி ஆட்கள் தேவை. நேரில் வரவும். வேலை பழகுவோரும் வரலாம்.

**டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்**
10, குரேசெற் ஒழுங்கை,
[கச்சேரி - நல்லூர் வீதி]
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்:
[கச்சேரியிலிருந்து 200 யார்]

(C/2390)

THE EXPRESS INSTITUTE KOPAY — A BOON TO STUDENTS

## O/L DAY CLASS

(காலை 8.00 - பி.ப 1.00)

- முற்றிலும் பாடசாலை போன்ற வசதிகளுடன்
- முழுப்பாடத்திட்டத்திலும் விரிவான மீட்டல், வினா - விடை வகுப்பு

**மே 5க்கு முன் பதியவும்**

[சி 2393]

## தேவை

எமது பதிப்பகத்திற்கு பின்வரும் துறைகளில் வேலை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை.

1. உதவி நிர்வாகப் பொறுப்பாளர் - மாத ஊதியம் ரூபா 1000.00 [பட்டதாரிகளுக்கு முன்னுரிமை]
2. பியோன் - மாத ஊதியம் ரூபா 700.00 [20 — 30 வயதிற்கு உட்பட்டோராய் இருத்தல் வேண்டும்]

தகுதியானோர் தகுந்த நற்சாட்சிப்பத்திரங்களுடன் 03 - 05 - 89 காலை 9 மணிக்கு நேரில் சமுகம் அளிக்கவும்.

— அஸ்ரன் பதிப்பகம்
C/o அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[சி-2370]

## கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 30

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக் சம்பவத்தின் பின்னர் கிளிநொச்சிப் பகுதி படிப்படியாக வழமைக்குத் திரும்பி வருகிறது. (உ-9)

## தெரிவுப்பணியில் குழுக்கள்

கரவெட்டி, ஏப். 30

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல கிராமங்களிலும் சனசவிய திட்டத்தின் கீழ் வறுமையான குடும்பங்களை தெரிவு செய்யும் பணியில் குழுக்கள் துரிதமாக ஈடுபட்டுள்ளன.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை இதனைத் தெரிவித்தார். (க-70)

## ஜனாதிபதி தலைவர்

இலங்கை ஏற்றுமதியாளர் சபைக்கு இனிமேல் ஜனாதிபதியே தலைவராகஇருப்பார். இத்தகவலை வர்த்தககப்பல் போக்குவரத்து அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்தார். [இ எ)

## சுவீடன் பேராசிரியர் யாழ். விஜயம்

ஒஸ்லோ, ஏப்ரல் 30

சுவீடனின் உப்சலா பல்கலைக்கழக ஆசிய இயல் ஆய்வுக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் ஷல்க் எதிர்வரும் ஜூன் மாதம் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

அவர் இங்கு பத்துமாத காலம் தங்கி இருந்து விரிவுரைகள், கருத்தரங்குகள் நடத்துவார் என அறிய வருகின்றது. [க]

## சந்தையில் சைக்கிள் திருட்டு

பச்சிலைப்பள்ளி, ஏப். 30

சாவகச்சேரி சந்தையில் சைக்கிள் திருடர் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. சந்தை நாட்களில் சைக்கிள்கள் களவு போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [க-117]

## நாடாளுமன்ற குண்டுத் தாக்குதல் வழக்கு

கொழும்பு ஏப்ரல் 30

நாடாளுமன்றக் குண்டுத் தாக்குதல் வழக்கு விசாரணை ஜூலை10 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இவ் வழக்கில் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோரைக் கொலை செய்ய முயற்சித்தது; தெனியாய முன்னாள் எம் பி கீர்த்தி அபயவிக்கிரம நாடாளுமன்ற லிகிதர் சேனாதிரா ஆகியோரைக் கொலை செய்தது ஆகிய குற்றச் சாட்டுக்கள் அஜித் குமார உட்பட 5 பேர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

ஜூரர் இன்றி மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை நடைபெறும்.

நீதிபதி வில் ஒருவரான ஜனாப் அமீர் இஸ்மாயில் வைத்திய சிகிச்சைக்காக வெளிநாடு செல்வதாலேயே விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (இ-எ]

## வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ் வழங்கல்

## FITNESS CERTIFICATES FOR MOTOR VEHICLES

1989 ஆம் ஆண்டுக்கான வாகன லைசென்ஸ் பெறுவதற்குத் தேவையான வாகனப் பரிசோதனையும், சான்றிதழ் வழங்குதலும் எமது கீழ்க்கண்ட புதிய முகவரியில் நடைபெறுகின்றன என்பதை வாகனச் சொந்தக்காரர்களுக்கு அறிவிக்கின்றோம்,

**டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்**
10, குரேசெற் ஒழுங்கை, (கச்சேரி - நல்லூர் வீதி)
சுண்டுக்குளி. யாழ்ப்பாணம்.
[கச்சேரியிலிருந்து 200 யார்]

(C/2391)

## விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

## A/L 91 புதிய பிரிவு

சனி, ஞாயிறு (காலை 9.00)

**எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு**

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. கலாசரன் |
| வர்த்தகவியல்:- | திரு. லங்கா |
| கணக்கியல்:- | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல்:- | திரு. சுப்பிரமணியம் |
| இந்துநாகரிகம் / இந்து சமயம் | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ்:- | திரு. குழந்தை |
| புவியியல்:- | திரு. குணராஜா |
| அரசியல்:- | திரு. மஃறூப் |

முக்கிய குறிப்பு

இந்த ஆசிரியர்கள் இந் நிறுவனத்தில் மட்டுமே ஒருங்கிணைந்து போதிக்கின்றார்கள்.

கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு 15 வருட காலமாக உறுதியானதும் நிலையானதுமான ஒரேயொரு நிறுவனம்.

[சி-2404]

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

சுத்தமான பசுப்பால் காலையிலும், மாலையிலும் வீடுகளுக்கும், சிற்றூண்டிச்சாலைகளுக்கும் விநியோகிக்கப்படும். தேவையானோர் எமது சங்கத்தில் முற்பணம் செலுத்தி வாடிக்கையாளராக பதிவு செய்து தேவையான பாலைப் பெற்றுக்கொள்ளலாம்.

விஷேட வைபவங்கள், தண்ணீர்ப்பந்தல் போன்றவற்றிற்குத் தொகையாக பால், தயிர் தேவைப்படின் முன்கூட்டியே பதிவுசெய்து தேவைக்கேற்ற பாலையும் தயிரையும் எமது சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். [சி/2402]

## ★ றெருசோ ★
## மூலப்பொருள்கள் விற்பனை

- வெளிநாட்டு சிப்ஸ்
- கலர் பவுடர் வகைகள்
- வெள்ளைச் சிமெந்து
- மற்றும் தேவையான பொருள்கள்

றெருசோ மாபிள் பதிக்கும் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

**மாபிள்ஸ்**
281-B, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2361)

## Uduvil Girl's College
## Dept of Further Education

COURSES

- German Language - 6 month Course
  **Registration on 5-5 89**
- Stenography - English & Tamil (Pitmans London)
- National Certificate in English (London - Sri Lanka)
- A. A. T (Sri Lanka & London)
- I. A. B. (Sri Lanka & London)

**Apply before 2-5-89**

**Registration 3-5 89**

(C/2388) DIRECTRESS.

## தேவை

விற்பனைப் (பெண்) பணியாளர்கள் நான்குபேர் தேவை. சைக்கிள் ஓடத்தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பப்பத்திரத்துடன் நேரில் வரவும்.

துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
பஸ்நிலையம் முன்பாக. —சுன்னாகம்.

(C/2342)

**இத்தினத்தை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்**
**கடந்த O/L பரீட்சை முடிவுகள் வெளியாகிய 2 ஆம் நாள்**

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

A/L 91 பிரிவு
O/L Day பிரிவு

★ யாழ் நகரின் அதிசிறந்த ஆசிரியர் குழு
★ பெறுபேறுகளில் சாதனைகள் புரிந்து வரும் தனித்துவம் வாய்ந்த நிறுவனம்

**Radiant Institute**
Pukankulam - Ariyalai,
JAFFNA.

(310)

## WANTED

Nursery Trained Teacher with experience for Chavakachcheri Church Nursery.

Apply with full details on or before 10-th May, 1989 to

The Pastor,
Parsonage,
JDCSI Church,
Chavakachcheri.

(303)

## HONDA MOTOR CYCLE

உதிரிப்பாக விற்பனையாளர்களுக்கு
புதிய Honda C90, 125, 180
உதிரிப் பாகங்கள் உடன் விற்பனைக்கு

மேலும் விபரங்களுக்கு:

**CANTABIA MOTORS**
21, Main Street,
JAFFNA.

[சி-2403]

## NEW MASTER INSTITUTE

B. M C Lane, :: Jaffna.

## 89 A/L DAY CLASSES

புதிய பகுதிகள் ஆரம்பம்
02-05-89 செவ்வாய் முதல்

**Physics - திரு. விக்கி**

9.15 — 10.15 — பொறியியல்
10.15 — 12.15 — ஒட்டமின்னியல்
1.00 — 2.00 — வெப்பவியல்

**Chemistry - திரு. இந்திரன்**

8.15 — 9 15 — கைத்தொழில் இரசாயனம்
1.00 — 2.00 — சேதன இரசாயனம்
2.00 — 3.00 — அயன் சமநிலை
3.00 — 4 00 — அவத்தைச் சமநிலை

**Botany - திரு. செல்வநேசன்**

7.15 — 8.15 — தாவர இராட்சியப் பிரிவும் இனப்பெருக்கமும்
9.15 — 10.15 — உடற் றொழிலியலும் இழையவியலும்
10.15 — 11.15 — வினாவிடை வகுப்பு
11.15 — 12.15 — நுண்ணங்கிகள் உலகம்

**Zoology - திரு. நாகநாதன்**

7.15 — 8.15 — குருதிச் சுற்றோட்டத் தொகுதி
8.15 — 9.15 — பொருளாதார விலங்கியல்
2.00 — 3.00 — முளையவியல்
3.00 — 4.00 — அசஞ்சரக்கும் தொகுதி, பிறப்புரிமையியல்


**Pure & Applied Maths - திரு. சந்திரமோகன்**

7.15 — 9.15 — நேர்கோடு
10.15 — 12.15 — மொத்தல், வரையீடு
2.00 — 3.00 — ஒரு தளவிசை
3.00 — 4.00 — சிக்கல் எண்கள்

[சி-2406]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### இராமு கதிரவேலு (கண்டு)

மலர்வு: 22 - 07 - 1935
உதிர்வு: 01 - 04 - 1989

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் உற்ருருக்கு சேவகஞய் எங்கள் இதய ஒளிவிளக்காய் எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொண்ட அன்புத்தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், பல வழிகளில் உதவி நல்கிய உற்ருர், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்ருேம். அத்துடன் 30-04-1989 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

மனைவி, மக்கள், சகோதரங்கள்,
மருமக்கள், மைத்துனர்கள், பெருமக்கள்.

கோவில் கடவை,
துன்னாலை தெற்கு, கரவெட்டி. [263]

J.M.J.

## 3ஆம் வருட நினைவஞ்சலி



### திரு. அ. செபமாலைமுத்து (ரவீந்திரன்)

படைப்பு: 07-10-1959
அழிப்பு: 30-04-1986

செருத்து பேசெருந்து பெரும் சிறப்போடு வாழ்ந்த என் அன்பனே! ஆதரவாய் அணைத்து அன்புடனே கதயேசி, ஆறுதலாய் இருந்து பல தேயுதலும் புரிந்த நீர் அப்பா என்று உனை அழைக்க மழலைச் செல்வம் எதுவுமின்றி என்னைமட்டும் தவிக்க விட்டு எங்குதான் சென்ருய் ஐயா?

வாழத் துடித்து நின்ருே வெளிநாடு விட்டு வந்தீர். வாழ்க்கை தொடங்கு முன்பே நெஞ்சில் வெடி பட்டதுவோ அன்பனே! உனை இழந்து நான் அடையும் துன்பம் கோடான கோடி ஐயா! ஐயனே! அன்னை மேரியின் அமலன் துணை என்றும் உமக்கருள என் ஆயுள் முழுவதையும் காணிக்கையாக்குகிறேன்.

அன்ஞரின் ஆத்மா சாந்தியடைய 1-05-89 காலை 6.15க்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்திலும் பலாலி காணிக்கை மாதா ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் என்றும் துயருறும்:
மனைவி (லீலா)

சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு.

பலாலி வடக்கு,
வசாவிளான். [230]

## வானுலகெய்திய 31ஆவது நினைவு நாள் அழைப்பிதழ்

எமது அன்புத் தெய்வமான
அமரர் திரு. தம்பு செல்லத்துரை அவர்களின்
சபிண்டீ கரணக் கிரியைகள்
எதிர்வரும் 01-05-89 திங்கட்கிழமை
முற்பகல் 10. 00 மணியளவில்

எமது இல்லத்தில் நடைபெறும். அவ் சமயம் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்ருேம்.

"தேவி வாசம்"
மடத்தடி.
தெல்லிப்பளை

அமரரின்
குடும்பத்தினர்.

[10698)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### டாக்டர் N. கோபாலபிள்ளை

L.M.S (Singapore)

திதி: 30 - 04 - 89

தாய் நாடு தேடி, தேடின தேட்டத்துடன்
முதிர்வுமுன் ஓய்வுபெற்று
ஓடி வந்தீர்கள் எம்முடன்
பெயரில்லா ஒழுங்கையை தங்கள் மாடிகளால்
மற்றவர்களையும் கட்ட வைத்து
மின்சார நிலைய வீதியாக்கினீர்கள்
தங்கள் மாடிகள் சரிந்து விட்டன
ஆனல் நீங்கள் விட்டுச் சென்ற
நோக்கங்கள் சரியவில்லை.

உங்கள் அன்பில் தளைத்த

மனைவி: சரஸ்வதி

பிள்ளைகள்: தேவதாசன் (U. K.)
சத்தியவதி சேனுதிராஜா,
Dr. சங்கரநாராயணன், D. M. O. (Nawalapitiya
ஞானி

பேரப்பிள்ளைகள்: சித்திரா பேரின்பநாதன் (U.K.)
மீரா சேனுதிராஜா
ருேய் சங்கரநாராயணன் (Rusia)
ஷேன் சங்கரநாராயணன்
க. பாலேந்திரன் (ஹரி)

[சி-2243]

## ஓராண்டு நினைவஞ்சலி



### சி. செ. மாரிமுத்து

(நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்)

மலர்வு: 14. 12. 1916
மறைவு: 10. 05. 1988

எங்கள் குடும்பத் தலைவனே! மூத்தோனே! முதல்வா! நீங்கள் இறையடி சேர்ந்து ஓராண்டு பூர்த்தியானலும் உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டகலவில்லை. எங்கள் குடும்பத்தின் உயர்வுக்கு உழைத்த ஐயா! உங்களை எமது உயிருள்ள வரை மறவோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

விதானை வளவு,
சித்தன்கேணி. [264]

## அன்பளிப்பு

கொக்குவில், ஏப்ரல் 30

பொற்பதி வீதியில் அண்மையில் வீடுகள் எரிக்கப்பட்டதனுல்உடைமைகளை இழந்த குடும்பங்களுக்கு கொக்குவில் நந்தாவில் மனேன்மணி சனசமூக நிலையம் சமையல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியது.

பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா பணத்தில் இருந்து வாங்கப்பட்ட துருவுபலகை சுடுதண்ணீர்ப் போத்தல், டம்ளர்கள், அரிவாள் போன்றவை அன்பளிப்புப் பொருள்களில் அடங்கும் (க - 69)

## உணவு முத்திரை

கரவெட்டி, ஏப்ரல் 30

யாழ் செயலகம் புதிய உணவு முத்திரைக்கான பட்டியல்களை உதவி அரசாங்க அதிபர்களிடம் இருந்து பெற்றுள்ளது. புதிய முத்திரை எப்போது வழங்கப்படும் என்பதை உணவு முத்திரையில் தங்கி வாழும் மக்கள் பெரும் அவலுடன் எதிர் பார்த்திருக்கின்றனர்.

ஏப்ரல் உணவு முத்திரை இதுவரை வந்து சேரவில்லை எனவும் அறியவருகியது. (க - 70)

## பருத்தித்துறையில் மதிய உணவு

பருத்தித்துறை, ஏப்ரல் 30

பருத்தித்துறை கிழக்கு கஷ்டப் பிரதேச பாடசாலைகள் மதிய உணவாக சோறு கறி வழங்க முன்வந்துள்ளதாகவும், பருத்தித்துறை நகரப் பகுதிப் பாடசாலைகள் கறி பணிஸ், கிறீம்பணிஸ், பாண், பழம், பால் வழங்க முன்வந்துள்ளதாகவும் அறியக்கிடைக்கிறது. [க - 118]

## லைலதுல் கத்ர் விசேஷ நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 30

புனித ரமழானில் வரும் லைலதுல் கத்ர் எனும்இரவை முன்னிட்டு எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் முஹிதீன் பள்ளி வீதி முஹிதீன் ஜும்ஆப்பள்ளி வாசலில் பல மார்க்க நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இரவு8 - 15மணிக்குஆரம்பமாகும்இஷாத் தொழுகையின் பின்னர் தாரவீஹ் வித்ரு திக்ருஸலவாத்தவ்பா போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

இவ் விசேஷ வைபவத்தில் மௌலவி கே. பீ. நாஸர்தீன் (ரசூலி) மார்க்கச் சொற்பொழிவாற்றுவார்.

## வீட்டுத் தோட்டப் போட்டி முடிவு

முல்லைத்தீவு ஏப்ரல் 30

முல்லைத்தீவு மாவட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1 ஆம் இடம் திரு. ரி. ரவீந்திரன் (ஒட்டுசுட்டான்) 2 ஆம் இடம் (திரு. ஏ. நடராசா (ஆலங்குளம்) 3ஆம்இடம் திரு. திருச்செல்வம்

இவர்களுக்கான பரிசுகள் விரைவில்வழங்கப்படவுள்ளன என்று முல்லை மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. கெ. பஞ்சலிங்கம் கூறினர். (க-92

## ஜனசக்தி பயிற்சி வகுப்பு

பூநகரி, ஏப்ரல் 30

ஜனசக்தித் திட்ட பயிற்சி வகுப்புக்கள் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன.

இப்பயிற்சி வகுப்புக்களில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். கனகசபை ஜனசக்தி அபிவிருத்தி பற்றியும், விவசாய போதஞசிரியர் திரு. எஸ். இராசகுலேந்திரன் உதவிக் குழுக்களின் கடமைகளும் பொறுப்புக்களும் பற்றியும், மாதர் சங்கத் தலைவி திருமதி த. லோகேஸ்வரி மனிதனின் அடிப்படைத் தேவைகள் பற்றியும் விளக்கி வருகின்றனர். (க-ரி,

வேகமாக விற்பனையாகின்றன

## S. L. A. S. (Ltd.)

யூன் மாதம் நடைபெறவிருக்கும்
போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி

● விடய ஆய்வு ● நுண்ணறிவு
● கிரகித்தல்

அஸ்ரன் வெளியீடு - விலை ரூபா 70. 00

யாழ் நகரில் பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

★ S. L. A. S. திறந்த பரீட்சைக்கான வெளியீடுகளும் விற்பனையாகின்றன.

★ 1982, 83, 84, 86, 87 இல் நடைபெற்ற மாதிரி வினுத்தாள்களையும் உள்ளடக்கியது.

அஸ்ரன் பதிப்பகம்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2373)

## மூன்ருவது ஆண்டு நினைவஞ்சலி



### சங்கர்லால் (குலேந்திரன்)

பிறப்பு: 1960 - 01 - 28
மறைவு: 1986 - 04 - 30

இளவயது முதற் கொண்டு
இன் தமிழர் நலம் பேணி
உளத்தினிலே வலுவோடு
உருவான காந்தியத்தின்
பலத்தோடு பணியாற்றி
பண்புடையோர் மத்தியிலே
நலமாக நிறைந்திருக்கும்
தகையோனே குலேந்திரா!
எந்தியொரு இலட்சியத்தை
இனத்துக்காய்ப் போராடி
நீந்தியவா குலேந்திரா
விட்டெம்மை நீ பிரிந்து
விரைந்தாலும் மூன்ருண்டு
முட்டுகின்ற துயரோடு
கொட்டுகின்ருேம் கண்ணீர்பா

குடும்பத்தினர், தோழர்கள்.

77, பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (272)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### குமாரகுலசிங்கம் வேலவன்

(சாள்ஸ்)

தோற்றம்:- 31 - 7 - 1967
மறைவு:- 30 - 4 - 1988

தமிழ் தாயின் தலை குனிவு கண்டு
தமிழ் மண் காக்க வீறு கொண்டு எழுந்தாய்
விடுதலையின் விடியலுக்குள்
விடுதலையாகி விட்டாயே!

உன் பிரிவால் வாடும்:
அம்மா, சகோதரர்கள்,
மச்சாள், மருமக்கள்.

மாவிட்டபுரம், [288]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் - நாளிதழ்

## பொய்யா மொழி

**குறள்:**

நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

**பொருள்:**

நாணம் என்று சொல்லப்படும் ந வள், கள் என்று சொல்லப்படும் விரும்பத்தகாத பெருங்குற்றம் உடையவர்க்கு எதிரே நிற்காமல் செல்வாள்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805, 22073
யாழ்ப்பாணம்.

30-04-1989 த. பெ. இல: 23

# மாணவருக்கு மதிய உணவு

பாடசாலை மாணவர்களுக்கு மதிய போசனம் வழங்கும் திட்டம் நாளை மறுதினம் நாடு முழுவதிலும் ஆரம்பமாக இருக்கிறது. யாழ்ப்பாணம் உட்பட சில மாவட்டங்களில் சில நாட்கள் தாமதமாகியே மாணவர்களுக்கு இலவச மதிய போசனம் கிடைக்கும் எனக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. திட்டத்திற்கு உரிய பணத்தைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதமும், நிர்வாகத் தடங்கல்களுமே அதற்குக் காரணம் என அறியப்படுகிறது.

இந்த வருடம் பதவிக்கு வந்த பிரேமதாச அரசாங்கத்தின் இரண்டு பெரும் சமூக நலத் திட்டங்களில் மாணவர்களுக்கான மதிய போசனத் திட்டமும் ஒன்றாகும். முதன்மை வகிக்கும் அடுத்தது ஜனசக்தித் திட்டம் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த இரண்டிலும் மாணவர் மதிய போசனத்திட்டம் ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்னர் நடைமுறையில் இருந்து பின்னர் கைவிடப்பட்ட ஒன்றாகும்.

பொதுவாக, பிரேமதாச அரசின் இரண்டு சமூக நலத் திட்டங்களும் உரிய விதத்தில் செயற்படுத்தப்பட்டு, விரும்பும், எதிர்பார்க்கும் பலன்களைத் தரும் பட்சத்தில் அவை மக்கள் எல்லோராலும் வரவேற்கப்படும்.

மாணவர்களுக்கான மதிய போசனத் திட்டம் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த இளம் சிறார்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது.

காலையில் வெறும் தேநீருடன் பாடசாலை செல்லும் சிறுவர்களும், காலையில் சாப்பிடாமையால் பாடசாலைக்குச் செல்லாது நாட்களைக் கடத்தும் சிறார்களும் இந்த நாட்டில் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள். சத்துள்ள உணவு வகைகளை உண்ண வசதி இல்லாமையால், தேக நலன் குன்றி, போஷாக்கின்மையால் நலிந்து மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டுக் கல்வி நிலை குன்றும் மாணவர்கள் இந்த நாட்டில் லட்சக்கணக்கானோராவர்.

இவற்றின் நிமித்தம் மாணவருக்கான இலவச மதிய போசனத்திட்டம் இந்நாட்டுக்கு அவசியம் தேவையான ஒன்றாகும். ஆனால் அது உரிய விதத்தில், உகந்த முறையில், ஊழல் மோசடி இல்லாமல் செயற்படுத்தப்படுவதில்தான் வெற்றியும், நற்பலனும் தங்கி உள்ளன.

முன்னர் மதிய போசனத் திட்டம் அமுலில் இருந்த வேளை இடம்பெற்ற ஊழல்கள், மோசடிகள், கையாடல்கள் ஆகியவற்றின் விளைவாக, அதிபர்கள், ஆசிரியர்கள் சமூகம் சம்பாதித்த அபகீர்த்தியை மறந்து விடுவதற்கில்லை.

அந்தப் பழைய அனுபவம் இம்முறை பிரஸ்தாப திட்டம் சீராகச் செயற்பட உதவவேண்டும். மதிய போசன விநியோகம் சம்பந்தமான நிர்வாகம், ஓட்டை ஒடிசலின்றி, முறைகேடுகளுக்கு இடமளியாத விதத்தில், நேர்சீராக நடக்கப் பார்த்துக் கொள்வது அவசியம்.

அதிபர்களைப் பொறுத்த வரையில், பாடசாலை நிர்வாக வேலைகளே அவர்களுக்குப் பெரும் பாரமானவை. மதிய போசன விநியோகம் சம்பந்தமான நிர்வாக அலுவல்களும் அவர்களிடம் சேர்ந்தால் அவர்கள் தோளில் மேலும் பாரம் ஏறும்.

ஆகவே மதிய போசனத் திட்டத்தை அமுல் செய்யும்போது, பல விடயங்கள், விளைவுகள், பக்க விளைவுகள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு செயற்படுத்த வேண்டும்.

எதிர்காலப் பிரசைகளான மாணவர் நலன் ஒன்றே பிரஸ்தாப திட்டத்தின் இலக்காக இருக்க வேண்டும். இடையில் இருப்பவர்கள், அதிகாரிகள் ஆகிய எவரும் பணம் சம்பாதிக்க வழிகாட்டும் திட்டமாக அது அமைந்துவிடக் கூடாது.

அந்தந்தப் பகுதிகளில் விளையக் கூடிய சத்துள்ள உணவுப் பொருள்களை மாணவருக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அது கிராம மட்டத்தில் தொழில் வாய்ப்பை அதிகரிக்கும் என்பது உண்மை.

இங்கேயும் நகரப் பாடசாலை மாணவருக்கு ஒரு உணவு வகையும், கிராமப் பாடசாலை மாணவருக்கு மற்றொரு உணவு வகையும் என்ற நிலை வரக்கூடாது. அது மதிய உணவுத்திட்டத்தில் ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கும் நிலையாக மாறிவிடும்.

இவையாவும் தீர்க்கமாக, திட்டமிடப்பட்ட ரீதியில் செய்யப்பட வேண்டியவை என்பதை மறந்துவிடலாகாது.

மொத்தத்தில் மதிய உணவுத்திட்டம் குறித்து அரசாங்கமும், மக்களும் கவனமாக, எச்சரிக்கையாக இருந்து திட்டத்தின் நலன் மாணவரைச் சேரப் பார்த்துக் கொள்ளுதல் மிக அவசியமாகும்.

## தீ பிடித்த ஸ்பானிஷ் கப்பல் கார்களுடன் கைவிடப்பட்டது!

மாட்ரிட், ஏப்ரல் 29

ஸ்பானிய சரக்குக் கப்பல் ஒன்றில் தீப்பிடித்தது.

மாலுமிகள் கப்பலை கைவிட்டு கரை சேர்ந்தனர்.

கப்பல் 400கார்களை ஏற்றிக் கொண்டு பிரான்ஸ் நோக்கிச் சென்று கொண்டு இருந்த போது தீப்பிடித்துக் கொண்டது.

கார்களுடன் கப்பல் நடுக்கடலில் கைவிடப்பட்டது. (எ)

# பெருவில் கெரில்லா - அரசுப்படை மோதலில் 66 பேர் பலி!

## 9 ஆண்டுகால யுத்தத்தில் இதுவரை 14 ஆயிரம் பேர் மரணம்

லிமா, ஏப் 29

பெருநாட்டில்நேற்று இடம் பெற்ற கடும் சண்டை ஒன்றில் 60 இடதுசாரிக் கெரில்லாக்கள் கொல்லப்பட்டனர்; 6 அரசுப் படையினரும் உயிரிழந்தனர்.

கடந்த ஒன்பது ஆண்டு காலமாக நடந்து வரும் கெரில்லா யுத்தத்தில் இடம் பெற்ற மோசமான மோதல்களில் ஒன்றாக நேற்றைய சம்பவம் வர்ணிக்கப்படுகின்றது.

ஏராளமான ஆயுதங்களுடன் நகரம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்த 2 வாகனங்களில் சென்று கொண்டிருந்த கெரில்லாக்களை அரசுப்படைகள் தடுத்து நிறுத்தினர் அதைத் தொடர்ந்து சடும் சண்டை ஏற்பட்டது.

பெரும் எண்ணிக்கையிலான தானியங்கி ரைபிள்கள், கிரேனேட்டுக்கள் அரசுப் படையினரால் கைப்பற்றப் பற்றப்பட்டன.

கெரில்லாக்கள் புரட்சிகர மார்க்ஸிய அமைப்பு ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 9 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இந்த கெரில்லா யுத்தத்தில் இதுவரை 14 ஆயிரத்துக்கு அதிகமானோர் உயிரிழந்தனர்.

நேற்றைய மோதல் நடந்த இடத்தை ஜனாதிபதி கார்ஸியா நேரிற் சென்று பார்வையிட்டார். (எ)

## தென் ஆபிரிக்க ராஜதந்திரிகளை வெளியேறும்படி பிரெஞ்சு அரசு உத்தரவு

பாரிஸ், ஏப்ரல் 29

மூன்று தென் ஆபிரிக்க ராஜதந்திரிகளை நாட்டை விட்டு வெளியேறும்படி பிரெஞ்சு அரசாங்கம் நேற்று உத்தரவிட்டது.

ராஜதந்திரிகளுக்குரியவிதத்தில் அவர்கள் செயல்படவில்லை என்று பிரெஞ்சு அரசாங்கம் காரணம் காட்டியது.

வருகிற செவ்வாய்க்கிழமைக்கு முன் மூன்று ராஜதந்திரிகளும் நாடு திரும்பிவிட வேண்டும் என்று பாரிஸில் அரசு அறிவித்தது.

ஆயுதக் கடத்தல், தீவிரவாதிகளுக்கு உதவுவது ஆகிய விஷயங்களில் தென் ஆபிரிக்க ராஜதந்திரி ஒருவர் உதவியது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (எ)

## ஆர்ஜென்டீனாவில் பொருளாதார நெருக்கடி

புவனர்ஸ் அயர்ஸ் ஏப்ரல் 29

ஆர்ஜென்டீனாவில் இம்மாதத்தில் மூன்றாவது தடவையாக வங்கிகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி நிலையங்கள் மூடப்பட்டன.

பண வீக்கத்தினால் நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டுள்ளது.

வேலை நிறுத்தம் அடிக்கடி இடம்பெறுவதால் உற்பத்தித் திறன் குறைந்துள்ளது.

இதைச் சமாளிக்க ஆர்ஜென்டீனா அரசு பொருளாதாரச் சிக்கன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (எ)

## பனாமாவைப் பலவீனப்படுத்த அமெரிக்கா தீவிர முயற்சி

### ஐ. நா. சபையில் குற்றச்சாட்டு

பனாமா சிட்டி, ஏப் 29

வருகிற மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை குழப்பும் எண்ணத்துடன் பயங்கரவாதத்தைத் தூண்டிவிட்டு நாட்டைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டிருப்பதாக பனாமா அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் விசேட கூட்டத்தில் இதனை பனாமாப் பிரதிநிதி வெளியிட்டார்

டி.வி, வானொலி நிகழ்ச்சிகளைக் குழப்பக்கூடிய எலக்ரோனிக் கருவிகளுடன் அமெரிக்கா நவீன பயிற்சி பெற்ற துருப்புக்களை பனாமாவுக்கு அனுப்பியிருக்கிறது என்றும் பனாமாப் பிரதிநிதி தெரிவித்தார்.

அமெரிக்கப் பிரதிநிதி இதனை மறுத்துப் பேசினார்.

ஜனாதிபதித் தேர்தலில் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட பனாமா அரசு முயற்சித்து வருகிறது. அதை மூடி மறைக்கவே பனாமா இக்குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளது என்று அமெரிக்கப் பிரதிநிதி சொன்னார். (எ)

## எண்ணெய்க் கப்பல் தரை தட்டியது

ஜெத்தா, ஏப்ரல் 29

இந்திய எண்ணெய்க் கப்பல் ஒன்று சவுதிஅரேபியாவுக்கு அருகில் தரைதட்டியது.

5 ஆயிரம் மெட்ரிக்தொன் மசகு எண்ணெய்யை இந்தக் கப்பல் ஏற்றி வந்தது. (எ)

# தமிழக அரசியல்

## ஜெயலலிதாவின் கூடலூர்சிறை விஜயம் பற்றி சட்டசபையில் வினா

சென்னை, ஏப்ரல் 29

செல்வி ஜெயலலிதா கூடலூர் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு காவலில் வைக்கப்பட்டிருந்த அ. தி. மு. க. எம். எல். ஏ. உக்கம்சந்துக்கு பழரசம் வழங்கிய செயல் சரிதானா? என்று தமிழ் நாடு சட்டசபையில் கேட்கப்பட்டது

தி. மு. க. எம். எல். ஏ. கே. எம். கதிரவன் இக் கேள்வியை எழுப்பினார்.

பொலீஸாரைத் தாக்க முயற்சித்தார் என்று கூறி அ. தி.மு.க.எம். எல். ஏ. உக்கம்சந்த் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்.

சிறையில் அவர் உண்ணாவிரதமிருந்து வந்தார். அதை முடித்து வைக்க செல்வி ஜெயலலிதா கூடலூர் சிறைக்குச் சென்று திரு. உக்கம்சந்த்துக்கு பழரசம் வழங்கினார்.

சிறைச்சாலைச் சட்ட விதிகளுக்கு முரணான இச்செயல்களை அதிகாரிகள் அனுமதித்தது சரியா?

இப்படி திரு. கதிரவன் கேட்டார்,

முதலமைச்சர் கருணாநிதி பதிலளிக்கையில் சொன்னதாவது;

ஜெயலலிதா கொடுத்த பழரசத்தை அருந்தும் முன்னர் சிறைச்சாலை டாக்டர் வழங்கிய பசும்பாலைக் குடித்து உக்கம்சந்த் உண்ணா விரதத்தைக் கைவிட்டார்.

சிறையில் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்எவரும் உண்ணாவிரதமிருக்கும் சமயம் வெளியார் எவரும் அவரைப்பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை—

இப்படி முதலமைச்சர் சொன்னார். (எ)

## கற்களால் தாக்கி கொலை

நிக்கோஸியா, ஏப்ரல் 29

விபசார விடுதிகளை நடத்தி வந்ததற்காக குற்றவாளிகளாகக் காணப்பட்ட 15 பேரை ஈரானியர்கள் பகிரங்க இடம் ஒன்றில் வைத்து கற்களால் எறிந்து கொன்றனர்.

இஸ்லாமிய நெறிக்கிணங்க இத்தண்டனை நிறைவேற்றப்பட்டதாக ஈரான் பத்திரிகை 'காய்ஹான்' அறிவித்தது.

கொலை செய்யப்பட்டவர்கள் 11 பேர் பெண்கள் ஏனைய நால்வரும் ஆண்கள். [எ]

## செனகலில் இனக் கலவரம்; அவசரகால சட்டம் பிரகடனம்!

கேப்டவுன், ஏப்ரல் 29

செனகல் நாட்டில்நேற்று அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டமும் கொண்டு வரப்பட்டது.

அரபு வழி மொரிட்டானிய பிரசைகளுக்கு எதிராக வன்செயல்கள் வெடித்ததைத் தொடர்ந்து இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

செனகல் நாட்டு மக்கள் ஆபிரிக்கா வம்சத்தைச் சேர்ந்தவர்கள். செனகல் பிரசைகள் நேற்று மொரிட்டானியரைத் தாக்கிக் கொலை செய்தனர். கடைகளைச் சூறையாடினர்.

25 மொரிட்டானியர்கள் வன்செயல்களில் கொல்லப்பட்டனர்.

மொரிட்டானியாவில் வாழும் செனகல் நாட்டுப் பிரசைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே செனகலில் கலவரம் ஆரம்பமானது. (எ)

# திறைசேரியை எதிர்பார்க்கிறோம்

## ஓய்வுபெற்றோருக்கான ரூ. 260 அலவன்ஸ் பற்றி

### பொது நிர்வாக அமைச்சர் விஜேக்கூன் கருத்து

கொழும்பு, ஏப் 27

ஓய்வூதியம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட 260 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி கிடைக்குமா?

இதுபற்றி பொதுநிர்வாகத்துறை அமைச்சர் திரு. யு. பி. விஜேக்கூன் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்ததாவது:.

இதுகுறித்து திறைசேரியிடமிருந்து எதுவித தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை.

எப்படியாயினும் இந்த அலவன்ஸை வழங்குவதுபற்றி முடிவாகவில்லை.

இந்த அலவன்ஸ் பணத்தை வழங்கவேண்டும் என்ற யோசனையை கடந்த டிசம்பரில் அமைச்சரவை அங்கீகரித்தது.

பிரதமர் என்ற முறையில் திரு. பிரேமதாச இந்த யோசனையைச் சமர்ப்பித்தார்.

இந்த அலவன்ஸ் விஷயம் இந்த அளவில்தான் நிற்கிறது.

அமைச்சரவையின் முடிவுக்கு இணங்க திறைசேரிக்கு அரசு மகஜர் ஒன்றை அனுப்பியது.

திறைசேரியிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்—

இப்படி திரு. விஜேக்கூன் சொன்னார். (இ-எ]

## ஸ்கண்டினேவிய நாடுகளில் பேராசிரியர் சிவத்தம்பி ஆய்வுரை

ஒஸ்லோ, ஏப்ரல் 29

பேராசிரியர் கா. சிவத்தம்பி சுவீடன், நோர்வே, பின்லாந்து, டென்மார்க் ஆகிய ஸ்கண்டினேவிய நாடுகளில் கடந்த சில மாதங்களாகப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள்பற்றி ஆய்வுரைகள் நிகழ்த்திவருகின்றார்.

அவர் 1988 செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களில் டென்மார்க்கின் தலைப்பட்டினமான கொப்பன்ஹேகனிலுள்ள நோடிக் ஆசிய இயல் ஆய்வுக் கழகத்தின் அழைப்பின்பேரில் தமிழ்ப் பண்பாடு பற்றிப் பேசுமாறு அழைக்கப்பட்டார்.

தொடர்ந்து அங்குள்ள பல்கலைக் கழகத்திலும், நோர்வேயிலுள்ள ஒஸ்லோ, பேர்சன் பல்கலைக்கழகங்களிலும் பின்லாந்தின் இரண்டு பல்கலைக் கழகங்களிலும், சுவீடனில் நான்கு பல்கலைக்கழகங்களிலும் உரைநிகழ்த்தினார்.

உப்சலாவில் ஒக்டோபர் 14, 15, 16ஆம் திகதிகளில் நடைபெற்ற யாழ்ப்பாணச் சமயங்களின் வரலாறு பற்றிய கருத்தரங்கில் கலாநிதிகள் பத்மநாதன், இரகுபதி, அருட்திரு. ஜெயசீலன் ஆகியோருடன் பேராசிரியர் சிவத்தம்பி பங்குபற்றினார். [க]

## மாகாணசபைத்தேர்தல்மனு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப் 27

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் ஆட்சேபனை வழக்கு விசாரணை மீண்டும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கு கொழும்பில் தேர்தல் நீதிபதி திரு. அசோகா குணவர்த்தனா முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, 12 ஆவது பிரதிவாதியான மட்டக்களப்பு அரச அதிபரைத் தவிர வேறு எவரும் சமுகமளித்திருக்கவில்லை.

மட்டக்களப்பு அரச அதிபர் சார்பில் மேமாதம் 24ஆம் திகதி ஆட்சேபமனு தாக்கல் செய்யப்படும் என்று அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

மேமாதம் 5 ஆம் திகதி ஏனைய பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்ற உத்தரவை மட்டக்களப்பு, திருமலை நீதிமன்றங்களுக்கு அனுப்பும்படி நீதிபதி உத்தரவிட்டார். (இ-எ)

### சமய சந்நிதிகளில்

## அப்பர்சுவாமி குருபூசை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

ஊர்காவற்றுறையில் இன்று ஞாயிற்றுக்கிழமை அப்பர் சுவாமிகளது குருபூசையை முன்னிட்டு அவரது தேவாரங்கள் காலையிலிருந்து மாலைவரை ஓதப்படும். (இ)

★

யாழ்ப்பாணம் ஏப் 30

அரியாலை இந்து இளைஞர் மன்றத்தினரால் அரியாலை அருள்மிகு விநாயகர் ஆலய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை அப்பர் சுவாமிகளின் குருபூசை நடைபெறும்.

மாலை 5 மணிக்கு விசேஷ பூஜை தீபாராதனையுடன் குரு பூசை நடைபெறும். அதைத் தொடர்ந்து திரு.வை. நித்தியானந்த சர்மாவினால் "நாம் அப்பூதியடிகளும்" என்னும் பொருளில் கதாப்பிரசங்கம் நடைபெறும். (இ]

## வேறுபாடுகள் இன்றி வாழும் சமுதாயமே முஸ்லிம் சமுதாயம்

### இதனால் பிரச்சினைகளுக்கு இடமில்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் குலம், கோத்திரம், நிறம், மொழி என்னும் வேறுபாடுகளின்றி வாழும் ஒரு சமுதாயமாகத் திகழ்வதால் எமக்குள் பிரச்சினைகள் தோன்ற முடியாது.

யாழ்ப்பாணக் கோட்டை ஜும்ஆப் பள்ளியில் நடைபெற்ற ஜும்ஆப் பிரசங்கத்தில் மௌலவி கே. பீ. நஸார்தீன் [ரஷாதி] மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;-

முஸ்லிம்கள் எப்போதும் சகோதரர்கள் என்றும் உள்ளார்ந்த ஒற்றுமையோடும், ஐக்கியத்தோடும் வாழ்வதால் எமக்குள்ளே இருக்கும் பூசல்கள், பிரச்சினைகள், குல, கோத்திரவேறுபாடுகள் அனைத்தும் மறைந்துவிடுகின்றன. ஆனால் எமக்குள்ளே இருக்கும் இயக்கச் சக்திகள், பிரிவினைச் சக்திகள் ஒன்றுபட்டு உழைத்தாலே நாம் எதனையும் சாதிக்கக்கூடியவர்களாக வாழ முடியும்.

அன்று நபித் தோழர்களும் இவ்வாறு ஒற்றுமையைக் கடைப்பிடித்ததன் மூலமே வெற்றியீட்டினார்கள்.

அதனையும் நாம் கடைப்பிடித்தால் நாமும் வெற்றி காணமுடியும்.

இவ்வாறு அவர் கூறினார். [இ]

## நவ ஜீவனம்

கொடிகாமம், ஏப் 30

சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற எ. வி. தம்பிராசா போதகர் அவர்களாலும் அமெரிக்க சுவிஷேச ஊழியர் எலிசபெத் பேக்கர் அம்மையாராலும் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த 30 வருடங்களாகத் தொண்டு புரிந்து வரும் பரந்தன் நவஜீவன ஸ்தாபனத்தின் 30 ஆண்டு நிறைவுதினம் நாளை முதலாம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்படவுள்ளது. [க-75]

## பொதுக்கூட்டம்

சுழிபுரம், ஏப். 30

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று பி. ப. 3. 30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும். [க-28]

## அஞ்சல் சேவையாளர் மாநாடு

அஞ்சல் தொலைத்தொடர்பு இளைப்பாறிய சேவையாளர் நல்ன்புரிக் கழகத்தின் மூன்றாவது ஆண்டு மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். ஆனைப்பந்தியிலுள்ள உயர் கலைக் கல்லூரியில் நடைபெறும். [க]



நிச்சயமாக உங்களில் ஒவ்வொருவரும் தனது சகோதரனுக்கு முகக்கண்ணாடி போன்றுவான். அவனிடத்தே அவன் ஒரு தவறைக் கண்டால் அவனை விட்டு அதனை நீக்குவானாக! அவன் உதவி கோரினால் உதவுவீராக! அவன் நோயுற்றால் சென்று விசாரிப்பீராக!

ஸஹர் முடிவு: 4-21
நோன்பு திறக்கும் நேரம் 6-20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B. நவீன சந்தை. :: யாழ்ப்பாணம்.



# உதயன்

30 - 04 - 1989 ஞாயிற்றுக்கிழமை



திருமண வைபவங்களுக்கேற்ற
* பட்டுப் பிடைவைகள்
* பட்டு வேஷ்டி சரல்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை. யாழ்ப்பாணம்.


## கல்விச் சேவைக் கமிஷனின் புதிய தலைவராக ஜேர்ஜ் மெண்டிஸ்

யாழ்ப்பாணம், ஏப். 30 கல்விச்சேவை ஆணைக்குழுவின் புதிய தலைவராக, முன்னாள் பிரதிக் கல்வி மா அதிபர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் நியமிக்கப்படலாம் என அறியப்படுகிறது.

அவரது பெயரே முதன்மையாகச் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, க. சே. ஆணைக்குழுவின் செயலாளர் பதவிக்கு திரு. பண்டார நியமிக்கப்படுவார் என அறிய வந்துள்ளது.

கல்விச்சேவை ஆணைக் குழுவின் தலைவராகப் பணிபுரிந்த திரு. ஹெட்டி ஆராய்ச்சியும், செயலாளர் திரு. எம். எச், எச். ஆரியரத்தினவும் திடீரென வேறு பதவிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுவிட்டனர். (அ)

கிரிக்கெட்:

## ஷப்ரு கொக்குவில் நாளை மோதல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30 பெனின்சுலா கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுச்சழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ் ஷப்ரூ கிரிக்கெட் அணியும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் மோதுகின்றன.

இந்த ஆட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகும்.

நேற்றுக்காலை நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் கொக்குவில் அணி, யாழ் ஜொனியன்ஸ் பி' அணியை வென்று இறுதியாட்டத்துக்குத் தெரிவானது.

நேற்று மாலை நடைபெற்ற மற்றைய அரையிறுதியாட்டத்தில் ஷப்ரூ அணி, ஜொலிஸ்ரார்ஸ் அணியை வன்றது. (உ-6)

## இந்தியர்களுக்கு தண்டனை!

குறிப்பிட்ட கால எல்லையைத் தாண்டித் தங்கியிருந்த 9 இந்தியப் பிரசைகளுக்கு சிங்கப்பூர் நீதிமன்றம் நேற்றுச் சிறைத்தண்டனை விதித்தது. அத்துடன் அவர்களுக்கு பிரம்படியும் தண்டனையாக வழங்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இத்தீர்ப்புக் குறித்து இந்தியா கவலை தெரிவித்திருக்கிறது. [ஒ-எ]


WANTED

SITE SUPERVISOR (Civil)

QUALIFICATION:
N. C. T Civil Engineering
or
Quantity surveying

EXPERIENCE 2 Years.

Please Call on Office at 9. 00 a. m. on 03.05.1989

K. A ENGINEERS,
147, Palaly Road,
Thirunelvely,
Jaffna

(10773)



## தவறிவிட்டது

அச்சுவேலியைச் சேர்ந்த திருவிளங்கம் செல்வச்சந்திரன் ஆகிய நான் 28 - 4 - 89 வெள்ளிக்கிழமை அச்சுவேலியில் இருந்து வல்லை, நெல்லியடி, கரணவாய், உடுப்பிட்டி ஊடாக பருத்தித்துறை செல்லும் வழியில் எனது அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் லைசென்ஸ், யாழ் / அரசினர் வைத்தியசாலை கிளினிக் காட் மற்றும் சில முக்கிய பத்திரங்கள் அடங்கிய U. S. A என பொறிக்கப்பட்ட கடும் நீல நிற பேஸ்ஒன்றைத்தொலைத்துவிட்டேன். இதைக்கண்டு எடுத்தவர்கள் அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு அருகில் இருக்கும் சண்டி ஸ்ரோர்ஸ் பலசரக்குக் கடை அல்லது அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்கிறேன். (320)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கணபதிப்பிள்ளை நவரத்தினராசா

24-04-88 ஆம் திகதி காலமாகிப் போய் இன்பு இறந்தவராகக் கருதப்படும் மகன் அமரர் கணபதிப்பிள்ளை நவரத்தினராசா ஆசிரியர் அவர்கள் [யாழ்/நாவாந்துறை றோ. க. வித்தி) காணமற் போய் இன்றுடன் ஓராண்டு பூர்த்தி அடைகின்றது. அவர் நினைவால் துயருறும் தாய் சகோதரர்கள் ஆகிய நாம் எமது துயரம் நிறைந்த நினைவுகளை அன்னாரின் 1ஆம் ஆண்டு நினைவுதினமாகிய இன்று அவரின் ஆத்ம சாந்திக்காக ஆறைவேண்டுதல் கிரியை ஒன்றினை நடத்துகின்றோம்.

இச் சடங்கில் கலந்துகொள்ளுமாறு அன்பர்கள் உற்றூர், உறவினர், நண்பர்கள் யாவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

தாய், சகோதரர்கள்.

செட்டிகுளம். (322)

# சாதி, மத, பேதமற்ற சமத்துவ மக்கள் குடியரசு மலரட்டும்

## பத்மநாபா மேதினச் செய்தி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30 நாளை மே தினமாகும். அதனை ஒட்டி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா விடுத்துள்ள செய்தி வருமாறு:-

கடந்த பல தசாப்தங்களாக அகிம்சா வழியிலும், ஆயுதப் போராட்டவழியிலும் எமது இன விடுதலைக்காகப் போராடி வந்த ஈழ மக்களுக்கு வரும் மேதினம் பல்வேறுவகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தமிழினம் தன்னைத் தானே ஆளும் உரிமையை வடக்கு-கிழக்கு மாகாண அரசு மூலம் பெற்றுக்கொண்டுள்ளது. முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இடையூறுகள் இருந்தபோதிலும் சட்டரீதியாக தமிழ் மொழி, சிங்கள மொழியைப் போன்றே இன்று அரச கரும மொழியாக்கப்பட்டுள்ளது. மலையகப் பாட்டாளிகளின் பறிக்கப்பட்ட அரசியலுரிமையை அதாவது பிரஜா உரிமை, வாக்குரிமை என்பவற்றை மீளப்பெறுவதற்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் ஈழவடு தலைப் போராட்டப் பாதையில் ஒரு திருப்பு முனையாகும்.

மலையகப் பாட்டாளிகளும், ஈழத் தொழிலாளர்களும் தமக்குக் கிடைத்துள்ள அரசியல் அதிகாரத்தையும், அரசியல் உரிமையையும் மேலும் வலுப்படுத்தவேண்டும். சிங்கள பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கையும், கிழக்கையும் பிரிக்கும் சூழ்ச்சிகள், இனங்களை மோதவிடும் சதி முயற்சிகள் என்பவற்றை முறியடித்து, எமது அதிகாரத்தை மேலும் பலப்படுத்த இந்த மேதினத்தில் நாம் சபதம் எடுக்க வேண்டும்.

மாகாண அரசு மக்கள் அரசாக மாறி தொழிலாளர், விவசாயிகளின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கவேண்டும். தொழிலாளர்களின் சட்டரீதியான சம்பளம், வீவுவசதி, நிரந்தர வேலை, எட்டுமணி நேரவேலை, தொழில் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு உத்தரவாதம் வழங்குவதுடன், நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம், வீடற்றவர்களுக்கு வீடு, தொழில் இல்லாதவர்களுக்கு தொழில் வழங்க வேண்டும். கடற் தொழிலாளர்களின் நலன்பேண ஏற்ற வழிவகைகள் மேற்கொள்ளவேண்டும். மக்களின் கடந்தகால இழப்புகள் ஈடு செய்யப்படவேண்டும்.

அதுவரையும் எம்மால் உருவாக்கப்பட்ட தொழிற் சங்கங்களை மேலும் வலுப்படுத்துவதுடன், ஈழத் தொழிற்சங்க சம்மேளனம் என்ற பேரணியில் ஒன்றிணைக்க வேண்டும்.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் மேதினக் கூட்டங்களை நடத்தி அதில் மாகாண அரசைப் பலப்படுத்துவோம், மாகாண அரசு தொழிலாளர் விவசாயிகட்கு உதவவேண்டும்' என்ற பதாகையை உயர்த்திப் பிடிக்கவேண்டும்.

வடக்குக் கிழக்கு மாகாண அரசு சுதந்திரம், ஜனநாயகம், சமாதானம் என்ற மக்களின் அபிலாஷைகளை உயர்த்திப் பிடித்து, நாட்டில் நவகாலனித்துவ, நவபாஸிஸ அமைப்பைத் தகர்த்தெறிந்து மக்கள் ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல, இம் மேதினத்தில் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் துண்டுப் பிரசுரங்கள், போஸ்டர்கள் மூலம் அறை கூவல் விடுக்க வேண்டும்.

இம்மேதினத்தில் அனைத்து சோஷலிச நாட்டு மக்களுக்கும், தமது விடுதலைக்கும், சுதந்திரத்திற்குமாகப் போராடும் மக்களுக்கும் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வோம்.

சாதி, மதபேதமற்ற, சமத்துவ ஜனநாயகக் குடியரசு மலரட்டும். அணு ஆயுதமற்ற, யுத்தமற்ற ஆயுதப் போட்டியற்ற உலக நோக்கு வெற்றி பெறட்டும்.

தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச தினமான மேதினத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துடன் இணைந்து உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்னும் கோஷத்தின் பின்னல் அணிதிரண்டு தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளுக்காகப் போராடுவோம். (ஒ)

## இணற்றில் விழுந்து மரணம்

அச்சுவேலி, ஏப். 30 பெற்றோர் வீட்டில் இல்லாத வேளையில் கிணற்றில் தண்ணீர் அள்ளிய சிறுமி ஒருத்தி தவறி விழுந்து மரணமான தாகச் சொல்லப்படும் சம்பவம் அச்சுவேலியில் நடந்துள்ளது.

மரணமான சிறுமி அச்சுவேலி நெல்லியோடையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் அனிதா (வயது 6) என்பவராவார்.

சிறுமியின் தாய் தண்ணீர் அள்ளச் சென்றபோது சிறுமியின் சடலம் மிதந்த நிலையில் இருந்ததாம். (க-11)

## கிளிநொச்சி,,,

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

னார்கள.

பாரதிபுரத்தைச் சேர்ந்த எம். மாரியாயி [வயது 31] என்பவர் துப்பாக்கிச் சூடு காரணமாகக் காயமடைந்தார்

27 பொதுமக்கள் பலத்த அடி காயங்களுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 5 பேர் பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்கள் விவரம்வருமாறு:-

காளி செல்வராஜா (வயது 26), 55ஆம் கட்டை. முனியாண்டி கதிரமலை (வயது 18), கிளிநொச்சி. சின்னத்துரை ஸ்ரீதரன் (வயது 22 , 55ஆம் கட்டை. நல்லதம்பி ராஜரத்தினம் (வயது 34), முருகண்டி. ராசு இராமநாதன் (வயது 28), பாரதிபுரம். (ஒ-ரி-163)

## கல்விச் சேவை வேலைகள் ஸ்தம்பிதம் குறித்துக் கவலை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30 ஆசிரியர்களின் மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்ற மேன்முறையீடுகள் தொடர்பான வேலைகளும், மாவட்ட அடிப்படையில் நியமனம் பெற்ற ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தொடர்பான வேலைகளும் தாமதம் அடைந்துள்ளன.

கல்விச் சேவை ஆணைக் குழுவின் ஏனைய வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் கவலை தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் தலைவரும், செயலாளரும் திடீரென இடமாற்றப்பட்டதாலேயே இந்த நி ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். [அ]

## கிளி. ஆஸ்பத்.,-

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முகநாதன் (21) நீலகண்டன் (25 தங்கசாமி (55)

கே. சுப்பிரமணியம் (25) அந்தோனி(39) ஏ. இலங்கேஸ்வரன் (20) எம் மயில்வாகனம் (31) எஸ். சகாதேவன் (29) கிரிதரன் (17) எம். சுப்பிரமணியம் (20) என். நாதன் (30) சேவியர் [35] வி. சுப்பிரமணியம் (20]. [ஒ-ரி-163]

## காலமானார்

சென்னை, ஏப்ரல் 30 தமிழகத்தின் பிரபல கவிஞரும் எழுத்தாளருமான புத்தனேரி ரா. சுப்பிரமணியம் நேற்று காலமானார் அவருக்கு வயது 64. (ஒ-எ)

## அடுத்த-----

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பு வந்து சேர்வார் என்று ஊகம் தெரிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பொலிட் பீரோவைச் சேர்ந்த மற்றும் இரு பிரமுகர்கள், வடக்கில் அடையாளம் தெரியாத இடத்தில் இருந்து கொழும்புக்கு விமான மூலம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன-என்றுஇங்கு செய்தி வெளியாகி உள்ளது.

பேச்சுவார்த்தைகளை விரும்பாத சில சக்திகளின் நிமித்தம் அந்த இருவரையும் கொழும்புக்கு அழைத்துச் செல்வதில் தாமதம் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

அடுத்த வாரத்துக்கு முன்னர் இவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்று வடபகுதியில் விஷயமறிந்த வட்டாரங்கள் நேற்று நம்பிக்கை தெரிவித்தன. (அ-எ-9)

## 'நாணு' சடலமாக மீட்கப்பட்டார்

திருகோணமலை, ஏப். 30 திரு. குமாரவடிவேல்(நாணு) கடந்த திங்களன்று துவரங்காடு பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இவர் கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவது சுயேச்சை குழுவின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்டவராவார்.

திரு. குமாரவடிவேல் கடந்த மார்ச் 30ஆம் திகதி திருகோணமலையில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார் என்பது தெரிந்ததே. (ஒ)

## தமிழ்ப்பகுதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி ஒரு சந்திப்பை ஏற்படுத்தியதற்காக திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. ஜனாதிபதிக்கு நன்றி கூறினார்.

அரசாங்க, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த வடக்கு-கிழக்கு எம். பிக்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர். (அ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அமிர்தவல்லி இராஜகுலசிங்கம்

[முன்னாள் மானிப்பாய் விதானையார் மனைவி]

திருமதி அமிர்தவல்லி இராஜகுலசிங்கம் கனடாவில் காலமானார்.

அன்னார் காலம் சென்ற மானிப்பாய் விதானையார் குலத்துங்கம் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும், கு. அரசகுலசிங்கம், திருமதி இரா. யோகமலர், க. சுகிர்தமலர், சி. செல்வமலர், திரு. Hunt ஆகியோரின் அன்பு மைத்துனியும், நந்தினி, திருமதி ச. சிவகுமார், கிருத்திகவல்லி, தனஞ்செயன், ரதீஸ்குமார், மதன்குமார், ஷேன், ஷாலின், ரிஷ்ஷா, சிவானி, கார்த்திகா, சர்மிலி, சகாயினி, உபநிஷா, யூலி, செல்வன் ராஜகுலேந்திரன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், சிவாநந்தினியின் அன்புப் பூட்டியுமாவார்.

குறிப்பு:- 28 - 04 - 1989 உதயனில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி மரண அறிவித்தலில் அன்னாரின் கணவரின் உறவினர்களினதும் பேரப்பிள்ளைகளினதும் பெயர்கள் தவறவிடப்பட்டன. அவர்களின் பெயர் விவரங்கள் இந்த அறிவித்தலில் வெளியாகியுள்ளன.

தகவல்:
K. R. பாலசுப்பிரமணியம்.

மானிப்பாய் தெற்கு. [10782]

## திரு. மூ. முத்தையா

இரத்தினபுரி அபுகாஸ்தனை குறூப் முன்னாள் பிரதம லிகிதர் திரு. மூ. முத்தையா அவர்கள் காலமானார்.

அவர் கிறேஸ் சிவக்கொழுந்தின் (பொன்னரியம்) அன்புக் கணவரும், றஞ்சி சந்தியாப்பிள்ளை (கனடா), Dr. மகேந்திரன் [U.K] ஆகியோரின் அன்புத் தந்தையும், அல்பேட் சந்தியாப்பிள்ளை [கனடா], கிறிசாந்தி [U.K] ஆகியோரின் அன்பு மாமனும், பிரயந்தா, தர்ஷனி, டிலான், மிரான், டுஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

நல்லடக்க ஆராதனை அன்னாரின் இல்லத்தில் நாளை திங்கட்கிழமை [01 - 05 - 89] நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.00 மணியளவில் சாவகச்சேரி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
மைத்துனர் K. D. . ஆனந்தம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. [10769]

## திரு. பொ. இராமநாதன்

[Fisheries Inspector யாழ்ப்பாணம்]

இல. 120, புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த பொ. இராமநாதன் அவர்கள் 26-04-89 அன்று காலமாகிவிட்டார். இவர் குணத்தின் அன்புக் கணவரும், ஜிவரேகா (Canada), ராஜமோகன் (Canada), சந்திரலேகா (Canada), சாவித்திரி (Canada), ராம்மோகன் (யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வக்குமார் (Canada), வசந்தி (Canada), சதானந்தன் (Canada), கிரிதரன் (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரேக்காவின் (Canada) அன்புப் பேரனும், நாகரெத்தினத்தின் அன்புச் சகோதரரும், தவமணி, தியாகராசா, செல்வராசா பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கந்தையாவின் சகலனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 01-05-89 திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மகன்

[10788]

## திரு. நாகமணி முத்துக்குமாரு

பலாலியைச் சேர்ந்த நாகமணி முத்துக்குமாரு 29-04-89 அன்று காலமானார். இவர் லீலாவதியின் அன்புக் கணவரும், ஸ்ரீகந்தராசா, அமரர் ஜெயா, விஜயன், விஜயகுமாரி, வளர்மதி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சிங்கராசா முத்துமாலை, திருச்சந்தி, தங்கமுத்து ஆகியோரின் சகோதரரும், சிங்கராயர், ஜெயக்கொடி, சி. வில்வக்கிளி, சி. தவஞானசெல்வம், சி. மகாதேவன், சி. ராணி, ம. குமுதம், சி. மலர், சி. லதா, அண்ணாமலை, கமலாதேவி, அ. முத்துத்தம்பி, அ. சிவஞெளிபாதம் ஆகியோரின் அன்பு மாமனாரும் மு. ஞானசேகர் (பிரான்ஸ்), மு. வதனி, மு. சுரேஸ் (பிரான்ஸ்), மு. பபி ஆகியோரின் பேரனும், செம்மலையில் வசிக்கும் கிருஷ்ணனின் உறவினரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 30-04-89 இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணியளவில் அண்ணாமலை முத்துத்தம்பி அவர்களின் இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் பலாலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

உதயகலைவாணி வீதி,
யாழ். றோட்,
பலாலி, வசாவிளான்.

தகவல்:
அண்ணாமலை முத்துத்தம்பி
குடும்பத்தினர்.

(336)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 226/8 இல் உள்ள அச்சகத்தில் 30 - 04 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org